# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஓபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg


| | |
|---|---|
| **பங்குத்தந்தை:** அருட்திரு மைக்கேல் சீத்தாராம் *frmichaelsitaram@gmail.com* | **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு பால் இயோ *fryeopaul@gmail.com* |
| **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | **பங்கு அலுவலகம்:** *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |


| 12 மே 2019 | பாஸ்கு காலம் - நான்காம் ஞாயிறு | மூன்றாம் ஆண்டு |
|---|---|---|



# உங்கள் சிந்தனைக்கு...

பாஸ்கா காலத்தின் நான்காம் ஞாயிறுக் கொண்டாடங்களில் கலந்து வந்துள்ள உங்கள் அனைவருக்கும் உயிர்த்த ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் அன்பு வாழ்த்துக்கள்!

இன்றைய இரண்டாம் வாசகமான திருவெளிப்பாடு நூலில் திருத்தூதர் யோவான் தன் ஆடுகளை அறிந்த இயேசு தானே ஆட்டுக்குட்டியாகத் தன்னை பலியாக்குகின்றார். இவரின் குரலுக்குச் செவிமடுத்து இவரைப் பின்பற்றியவர்களின் ஆடைகளை இவர் தன் இரத்தத்தால் தூய்மையாக்குகின்றார். பலியான ஆட்டுக்குட்டியே அவர்களை மேய்க்கின்றார். அவர்களின் கண்ணீர் அனைத்தையும் துடைத்துவிடுகிறார்' என்று இயேசுவின் அழைத்தலுக்கு செவிமடுப்பதன் அவசியத்தையும் பயனையும் நமக்குத் தெளிவுப்படுத்துகின்றார்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் ஆண்டவர் இயேசு தன்னை நல்ல ஆயனாகவும், மாபெரும் தலைவனாகவும் சுட்டிக் காட்டுகிறார். ஆயன், ஆடு உருவகத்தின் மூலம் தனக்கும் தனது சீடர்களுக்குமிடையே உள்ள ஆழமான உறவை வெளிப் படுத்துகிறார். ஆயன், காணாமல் போன ஆட்டைத் தேடிக் கண்டுபிடிப்பதைக் குறிப்பிட்டு (லூக். 15:1-7). அதே நேரத்தில் நல்ல ஆயன் நானே என்று தன்னையே ஆயனாக இயேசு வெளிப்படுத்துகிறார் (யோவா. 10:11). ஆயன் மந்தையை அறிவான், ஆடுகளும் ஆயனைப் புரிந்துகொள்கிறது. ஆயனின் குரலைக் கேட்டு அவன் பின்னால் செல்கிறது. ஆயனும் அளவில்லாத அன்பு கொண்டு தனது உயிரைக் கொடுக்கவும் தயங்குவதில்லை. இயேசு, இறைவனின் செம்மறியாகவும், நல்ல ஆயனாகவும் இந்த உலகிற்கு வந்தார். செம்மறி போல் நம் மீட்புக்காகத் தம்மையே கையளித்தார்.

நான் தான் உங்களைத் தேர்ந்துகொண்டேன். நீங்கள் உலகில் சென்று பலன் தரும்படியாக நான் தான் உங்களைத் தேர்ந்துக்கொண்டேன் என்ற இயேசுவின் வார்த்தையைச் சிந்தித்துப் பார்த்தால் இறையழைத்தலின் மகிமையை நன்கு உணரலாம். இயேசுவின் அழைப்பை ஏற்ற அவரது அடிச்சுவட்டில் வாழ நம்மையே இறைவனுக்கு அர்ப்பணிப்போம். அதற்கான இறையருளைப் பெற வேண்டி இன்றைய திருப்பலிக் கொண்டாடங்களில் தந்தையிடம் மன்றாடுவோம்.

## குருத்துவ அர்ப்பணிப்பின் 27 ஆம் ஆண்டு நிறைவு




அன்பார்ந்தவர்களே! வருகின்ற 17-05-2019, வெள்ளிக்கிழமை நமது **உதவிப் பங்குத்தந்தை பால் இயோ** அவர்கள், தனது குருத்துவ அர்ப்பணத்தின் 27 ஆம் ஆண்டு நிறைவை இறைவனுக்கு நன்றி சொல்லி நினைவு கூருகின்றார். நாமும் இவரோடு சேர்ந்து இறைவனுக்கு நன்றி செலுத்துவோம். தொடர்ந்தும் இவரது இறை பணிக்காகச் செபிப்போம்.

நம் அன்புத் தந்தைக்கு தூய லூர்து அன்னை ஆலயப் பங்குத் தந்தையர்கள்,
பங்கு மக்கள் சார்பாக வாழ்த்துக்களும் செபங்களும் உரித்தாகுக!

## ஆலயப் புதுப்பிக்கும் பணிக்கான நிதி சேகரிப்பு



அன்பார்ந்தவர்களே! நமது தூய லூர்து அன்னை ஆலயப் புதுப்பிக்கும் பணிகள், வருகின்ற ஜூலை மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்காக உங்கள் நன்கொடைகளை காசோலை மூலமாக “Church of Our Lady of Lourdes” என்ற பெயருக்கு வழங்கலாம். காசோலையின் பின்புறத்தில் “Building Fund” என்று குறிப்பிடவும். தாராள மனதுடன் உங்கள் நன்கொடைகளை அளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

## புனித வின்செண்ட் தே பவுல் சபைக்கான காணிக்கை

கடந்த ஞாயிறு (05-05-2019) அன்று எடுக்கப்பட்ட இரண்டாம் காணிக்கையில் கிடைத்த மொத்த தொகை S$ 4003.25
பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட தொகை S$ 7450.00
தாராளமாகக் கொடுத்த உங்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

## பொது விடுமுறைத் திருப்பலி நேரம்

**20-05-2019 திங்கள் - விசாக தினம்**




காலை 10 மணிக்குத் தமிழ் திருப்பலி
(மதியம் 12மணி முதல் நம் ஆலய வளாகத்தின்இரும்புக் கதவுகள் மூடப்பட்டிருக்கும்.)
அன்று நம் பங்கு அலுவலகத்திற்கு விடுமுறை

## திருமண முன் தயாரிப்புக் கருத்தரங்கு






**19-05-2019 ஞாயிறு, காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை**
**இடம்: தூய லூர்து அன்னை ஆலயப் பல்நோக்குச் சமூகக்கூடம்**

முன்பதிவுக் கட்டணம் $30 செலுத்தி முன்னதாகப் பெயர்களைப் பதிவு செய்வோருக்கு, கருத்தரங்கு முடிந்தவுடன் பங்கேற்புச் சான்றிதழ் தரப்படும்.

**தொடர்பு: திரு. ரெக்ஸ் (9822-6171)**

## நல்லாயன் ஞாயிறு காணிக்கை

நல்லாயன் ஞாயிறான இன்று திருப்பலிகளில் எடுக்கப்படும் காணிக்கை, சிங்கப்பூர் மறைமாவட்ட குருத்துவப் பணிகளுக்காகவும், தூய பிரான்சிஸ் சவேரியார் பெரிய குருமடத்தின் செலவுகளுக்காகவும் பயன்படுத்தப்படும்.

உங்கள் தாராள மனதிற்கு மிக்க நன்றி.

## தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள்



ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக் கிழமை காலைத் தமிழ் திருப்பலி முடிந்ததும், நமது ஆலயத்தில் தமிழில் மறைக்கல்வி வகுப்புக்கள் நடைபெறுகின்றன. உங்கள் பிள்ளைகளும் ஞானத்தில் வளர அனுப்பி வையுங்கள்.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதல் வாசகம்:** | திருத்தூதர் பணி 13: 14,43-52 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 100: 1-2. 3. 5 |
| **பதிலுரை:** | நாம் அவர் மக்கள், அவர் மேய்க்கும் ஆடுகள்! |
| **இரண்டாம் வாசகம்:** | திருவெளிப்பாடு 7: 9,14b-17 |
| **வாழ்த்தொலி:** | அல்லேலூயா, அல்லேலூயா! நல்ல ஆயன் நானே. நானும் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன்; என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன, என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா. |
| **நற்செய்தி வாசகம்:** | யோவான் 10: 27-30 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை: | காலை 9:00 மணி (ஆ),10:00 மணி (த) |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:30 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ, அல்லது உங்கள் இல்லத்திலோ, உங்களுக்காக செபிப்பதாகக் கூறிக் கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு. நன்றி.

